1973 நவம்பர் 19]

Director of Industries, Deputy Sceretary, Finance, Deputy Secretary, Industries, a representative of the All-India Handicrafts Board, a representative of the Handicrafts Industrial Co-operative Society, a representative of the Artisans and a Member of the Legislative Assembly.

உப்பு உற்பத்தி

* 174 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நவீன முறையில் உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் முகவை மாவட்டத்தில் மாரியூர் சதுப்பு நிலத்திலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் கோவளம் பகுதியிலும், நெல்லை மாவட்டத்தில் வைப்பார்-வேம்பார் பகுதியிலும் தூத்துக்குடி துறைமுகத்திற்குத் தென் பகுதியிலும் பெரிய உப்பளங்கள் நவீன முறையில் அமைக்கும் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலீடு பற்றிய விவரம் தற்பொழுது இல்லை.

தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற் பிரிவுகளுக்கு உதவி

* 175 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தீப்பெட்டித் தொழிலை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் கையால் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏறத்தாழ ஆயிரம் உள்ளன. சிம்புகள்—மருந்து பூசிய பாகங்கள், நீலநிற தீப்பெட்டிக் காகிதம், திக்குச்சி, மெழுகு,